DMC, KUNNAM

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| C.C.No. 163 /2023, Kunnam P.S. PW -4. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனலெட்சுமி | Caste | : | - |
| Father/ Husband Name | : | பாக்கியராஜ் | Calling | : | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village | : | புதுவேட்டக்குடி | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 34 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.01.2026 | | | | | |

1,2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சென்னையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் தற்போது பணி செய்து வருகிறேன். 1–ம் எதிரி என்னுடைய மாமியார், 2–ம் எதிரி என்னுடைய மாமனார், 3–ம் எதிரி என்னுடைய கொழுந்தனார் ஆவார். கடந்த 21.03.2023 ம் தேதி அன்று காலை 7.45 மணியளவில் நான் புதுவேட்டக்குடியில் உள்ள எனது வீட்டில் நானும் என்னுடைய குழந்தைகள் ஆகியோருடன் அங்கிருந்தோம். என்னுடைய நகைகள் 3 பவுன் மற்றும் 2 லட்சம் ரூபாய் பணத்தினை லோன் எடுத்து எனது மாமியாரான 1–ம் எதிரியிடம் வீடு கட்டுவதற்காக கொடுத்து வைத்திருந்தேன். அந்த சமயத்தில் எனது கணவர் பாக்கியராஜ் வீட்டிற்கு வந்திருந்தார். என்னுடைய கணவர் 1–ம் எதிரியிடம் நான் கொடுத்து வைத்திருந்த பணம் நகையை தருமாறு கேட்டபோது 2,3 எதிரிகள் ஆகியோர் என் கணவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது போதையில் 3–ம் எதிரி அருவாள் மனையை எடுத்து வந்து எனது கணவரின் வலது கையை வெட்டினார். நான் 2–ம் எதிரியிடம் என் கணவர் பவுனை தானே கேட்டார் என்று கேட்டபோது என்னை 2–ம் எதிரி முடியை பிடித்து தலையில் அடித்தார். 3–ம் எதிரி என்னை நெஞ்சில் எட்டி உதைத்தார். எனக்கு நெஞ்சி வலி ஏற்பட்டது. எனது கணவருக்கு அடிப்பட்டு ரத்தம் வலிந்த நிலையில் குன்னம் காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்தோம். அங்கிருந்த போலிசார் புகாரை எழுதி கொண்டார்கள். அந்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகாரும், அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். **புகார் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அரியலூர் அரசு மருத்துவமனையில்

உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தோம். எனது கணவர் 4 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :-

1. புதுவேட்டக்குடியில் நான் தங்கியருந்த வீடு யாருடைய வீடு என்றால் என்னுடைய வீடுதான். எதிரிகள் 1,2,3 பேரும் எங்கிருந்து வந்தார்கள் என்றால், 1-வது எதிரிக்கு 2 வீடுகள் உள்ளது, ஒரு வீட்டில் நாங்கள் குடியிருந்தோம்., இன்னொரு வீட்டில் எதிரிகள் குடியிருந்தார்கள். எதிரிகள் அவர்களது வீட்டில் இருந்து வந்தார்கள். நான் 2 லட்சம் ரூபாய் பணமும், 2 சவரன் நகையும் கொடுத்ததாக சொன்னது வீடு கட்டதானே கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அன்றைய தினமே கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்தில் உள்ள அதிகாரிகள் எழுதினார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன விபரம் தான் புகாரில் இருந்ததா என்றால் சரிதான்.

2. மதி என்பவர் என்னுடைய அண்ணன் ஆவார். மதிக்கும் எனது கணவருக்கும் சென்னையில் ஒரு பிரச்சனை ஏற்பட்டு மதியை பாக்கியராஜ் பாட்டிலால் குத்தியதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு நடந்து முடிந்து விட்டது என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் மதி கொடுத்த புகாரில் பாக்கியராஜ் கைது செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாதிக்கப்பட்ட நபர் பாக்கியராஜ் 1,2 எதிரிகளின் மகன் என்பதால் தற்போது சமாதானம் ஆகி விட்டு அவர் தானாக கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு என் கணவருக்கும் பேச்சு வார்த்தை உண்டா என்றால் தற்போது அவர் என்னுடன் இல்லை அதனால் நான் பேசுவது இல்லை.

3. 2-ம் எதிரி என் தலையை பிடித்து அடித்ததாகவும், 3-ம் எதிரி நெஞ்சில் உதைத்ததாகவும் சொன்னது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை. இந்த வழக்கிற்கும் ஆஜர் 1,2,3 எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUNNOCRUM KUNNAM